# தகவல்
# தொழில்நுட்பப்
# பணியாளர்கள் பிரிவு

***சனவரி*** 2020

திபி 2051 . மலர் 1 . இதழ் 1



## நாம் தமிழர் கட்சி

# பதிப்புரை

தமிழர் திருநாள் தைப் பொங்கல். நம்பிக்கை எல்லைகளையெல்லாம் கடந்து தமிழரின் திருநாளாக நிற்கிறது. இந்த வருடம் நாம் தமிழருக்கு மிக முக்கியமான வருடமாகும். 2021 தேர்தல் வெற்றியை இவ்வருடத்தின் உழைப்பே முடிவு செய்யும்.

கண்முன் நிற்கும் பணிகள் நிறைய. கடக்க வேண்டிய பாதையும் கடிது. நெஞ்சுரத்தோடு பயணிப்போம்.

பொங்கல் நல்வாழ்த்துகள்.

ஆசிரியர் குழு

## இவ்விதழில்

1. 2020
2. மக்கள் களம்

> “எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."
>
> - தலைவர் பிரபாகரன்

ஒரு புதிய ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

இந்த ஆண்டு நம் கட்சிக்கு மட்டுமல்ல , அடுத்த பத்தாண்டுகள் தமிழர்களுக்கே முக்கியமானதாகும்.

**எப்படி?**

இந்தியாவிலேயே மிக அதிகமாக உழைக்கும் வயதினிரான மக்கள் உள்ள பெரிய மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் 2011 இலிருந்து இருந்து வருகிறது.

2020 இல் இது உச்சத்தை அடையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு மெதுவாக இது குறைய ஆரம்பிக்கும்.



இந்தியா உலக அளவில் அதிகமான இளைஞர்கள் கொண்ட நாடாக 2018 இலிருந்து - 2055 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆனால், வட மாநிலங்களைவிட தென் மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டதன் காரணமாக. இது 2040 வாக்கிலேயே முடியும்.

2040 இல் வட மாநிலங்களில் உழைக்கும் மக்களின் எண்ணிக்கை உச்சத்தை அடையும்.

எனவே, தமிழகம் இளைஞர்கள் அதிகமுள்ள , உழைக்கும் மக்கள் அதிகமுள்ள ஒரு சிறப்பான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறதுஇப்போது ., நாம் பெறும் வளர்ச்சியே அடுத்த 100 வருடங்களுக்கான தமிழகத்தின் நிலையைத் தீர்மானிக்கும்.



2020 - 2040 தமிழகம் உறுதியான வளர்ச்சிகளைப் பெற வேண்டிய காலமாகும்.

**என்ன செய்ய வேண்டும்?**

தமிழகத்தின் கல்வி நிலையங்களை வலுப்படுத்த வேண்டும், குறிப்பாக தொழிற்கல்வியில். வட்டத்திற்கு ஒரு மேல்நிலைப் பள்ளி, முழுவதும் தொழிற்கல்விக்காக, ஆரம்பிக்கப்பட வேண்டும்.

புதிய தொழில்களைக் கற்றுக் கொள்ள விரும்புவோரும் இதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதன் மூலம் திறன் கூடும்.

ஆராய்ச்சிக்கு அதிகமாக பணம் ஒதுக்க வேண்டும். தமிழகத்தின் மொத்த உற்பத்தி 17 இலட்சம் கோடி. அதில் 1% ( 17,000 கோடி ) ஆவது ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

கப்பல் கட்டுதல், கப்பல் நிறுவனம் ஆகிய புதிய துறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

சுற்றுலாத் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

வெளிநாடுகளில் உள்ள தமிழர் மற்றும் தமிழ் வம்சாவழியினரைத் தமிழகத்தில் தொழில் துவங்க ஊக்குவிக்க வேண்டும்.



சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும்.

அதிகரிக்கும் முதியோர் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவமனைகள் அமைக்கப்பட வேண்டும்.

அதிக அளவு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். வளர்ச்சிப் பரவலாக்கப்பட வேண்டும். தமிழர்கள் பல முதலாளிகளை உருவாக்க வேண்டும். இவை அனைத்தும் அடுத்த 20 வருடங்களுக்குள் நடந்தே ஆக வேண்டும்.



